தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.11.2012 P.M

12.11.2012 A.M

## மேட்டூரில் தண்ணீர் திறப்பு 12 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

காவிரி டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறப்பு 12 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

காவிரி டெல்டா பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால், அணையிலிருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், மேட்டூர் நீர் மின் நிலையத்தில் 50 சதம் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து சனிக்கிழமை 8 ஆயிரம் கன அடி திறந்துவிடப்பட்ட நீர், ஞாயிற்றுக்கிழமை 12 ஆயிரம் கன அடியாக உயர்ந்தது. அணையின் நீர் இருப்பு 30.55 டி.எம்.சி. இதில் 10 டி.எம்.சி. தண்ணீரை மீன் வளர்ப்பு மற்றும் குடிநீருக்காக தேக்கிவைக்க வேண்டும். மீதமுள்ள 20.55 டி.எம்சி நீரைத்தான் பாசனத்துக்காக திறக்க வேண்டும். தற்போது, காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

இந்த நிலையில், டெல்டா பாசனத்துக்காக நாளொன்றுக்கு ஒரு டி.எம்.சி. தண்ணீர் வீதம் திறக்கப்பட்டால், மொத்தம் 20 நாள்களுக்கு மட்டுமே திறக்க முடியும்.

டெல்டா பாசனத்துக்காக ஜனவரி 28-ஆம் தேதி வரை தண்ணீர் தேவையிருப்பதால், தொடர்ந்து தண்ணீர் திறக்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து குறைந்தால், பாசனத் தேவைக்காக தண்ணீர் திறப்பதில் சிக்கல் ஏற்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 67.45 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,862 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 30.55 டி.எம்.சி.யாக உள்ளது.

11th nov 2012 P.M

**பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணை நவ. 15 ல் திறப்பு**

பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணையில் இருந்து வரும் 15 ம் தேதி (வியாழக்கிழமை) தண்ணீர் திறந்து விடப்படும் என அணை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனிடையே மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது.

தாமிரவருணி பாசனத்தில் தென்மேற்கு பருவ மழை பொய்த்த காரணத்தால் கார் பருவம் சாகுபடி செய்யவில்லை. இந்த நிலையில் வடகிழக்கு பருவ மழை தொடங்கியுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இதை தொடர்ந்து பிசான பருவ சாகுபடிக்கு கடனாநதி, ராமநதி அணைகளில் இருந்து இம்மாதம் 9 ம் தேதி சாகுபடி செய்ய தண்ணீர் திறக்கப்பட்டது. பாபநாசம் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இன்று பாபநாசம் அணையின் நீர்மட்டம் 77.00 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 542.46 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 304.75 கனஅடி திறந்து விடப்படுகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 89.40 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 62.70 அடியாகவும் இருந்தது.

மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 163 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் பெருங்கால் மதகில் இருந்து 10 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 73.10 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 81.45 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து 125 கனஅடி திறந்து விடப்படுகிறது.

ராமநதி அணையின் நீர்மட்டம் 80.25 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 6 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து பாசனத்திற்கு 45 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த இரு தினங்களாக நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்து காணப்படுகிறது.

பிசான பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11 கால்வாய்கள் வழியாக பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்கு

இம்மாதம் 15 ம் தேதி (வியாழக்கிழமை) தண்ணீர் திறந்து விடப்படும் என அணை வட்டாரங்கள் தெரிவித்தன.

**உணவு உற்பத்தி இலக்கை எட்ட நவீன தொழில் நுட்பங்கள் :**
**கே.ஏ.செங்கோட்டையன் எம்.எல்.ஏ. பேச்சு**

நடப்பு 2012-13-ம் ஆண்டில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தியை 120 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக வேளாண்மைத்துறை மூலம் பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, கோபி சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோபி சீதா திருமண மண்டபத்தில் கோபி வட்டார வேளாண் துறையின் சார்பில் நடைபெற்ற 'ராபி' பருவ முன்பருவப் பயிற்சியில் கோபி சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில்,

வேளாண்மை விரிவாக்கப் பணிகளை மேம்படுத்த தமிழக வேளாண் துறை வரலாற்றில் முதல் முறையாக ஊராட்சி ஒன்றிய அளவில் 213 ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள 16,564 வருவாய் கிராமங்களிலும் அனைத்து நவீன தொழில் நுட்பங்களும் விவசாயிகளை அடையும் விதத்தில் அறுசுவை உணவுடன் உழவர் பெருவிழா நடத்தப்பட்டுள்ளது. 2012-13-ம் ஆண்டில் என்றும் இல்லாத வகையில் வேளாண் துறைக்கு 3805 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

75 லட்சம் சிறு, குறு விவசாயிகளின் வருவாயைப் பெருக்க பண்ணை சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு, மண்வளக் கையேடு வழங்கப்பட்டு வருகிறது. சுதந்திரம் அடைந்த பின்பு முதல் முறையாக கடந்த ஆண்டில் ஜூன் 12-க்கு பதிலாக ஜூன்-6-ந் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது.

சிறு, குறு விவசாயிகளின் நன்மைக்காக 100 சத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம், நவீன கரும்பு சாகுபடி ஆகிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகளில் வட்டியில்லாக் கடன் வழங்க ரூ.150 கோடியும், பயிர்க் கடன்களுக்கு ரூ.4000 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திருந்திய நெல்சாகுபடி என்ற தொழில்நுட்பம் மூலம் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளது. அதற்காக விவசாய குழுக்களுக்கு முழு மானியத்தில் விசை களை எடுக்கும் எந்திரங்கள் வழங்கப்படுகின்றன என்று பேசினார்.

கோபி வேளாண்மை உதவி இயக்குநர், அ.நே.ஆசைத்தம்பி வரவேற்றார். ஈரோடு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் க.கிருஷ்ணமூர்த்தி, வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, கோபி நகராட்சித் தலைவர் ரேவதி தேவி,உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, தோட்டக்கலை உதவி இயக்குநர் சுமதி, கோபி வருவாய் கோட்டாட்சியர் பழனிச்சாமி உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

முகாமில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை பட்டு வளர்ச்சித் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச் சான்று, மைராடா வேளாண் அறிவியல் நிலையம் உள்ளிட்ட துறைகளைச் சார்ந்த நவீன தொழில் நுட்பக் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இதில் கோபி வட்டாரத்தைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட விவசாயிகள், 'டான்வா' மகளிர் குழுக்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 36 பயனாளிகளுக்கு ரூ.3.5 லட்சம் மதிப்பில் பல்வேறு விவசாய இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்பட்டன.

## நிலத்தடி நீர்மட்டம் : மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த மழைநீர் சேகரிப்பு உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வேண்டும் என்றார் மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி.

திருவாரூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குடிநீர் ஆதாரங்களை பராமரித்து செயல்படுத்துதல், நீர்ப் பரிசோதனை செய்வது குறித்த உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

அனைவருக்கும் சுத்தமான சுகாதாரமான குடிநீர் வழங்க, பாரம்பரியமாக உள்ள நீர்

ஆதாரங்களை கண்காணித்து, சுத்தமாக பராமரிக்க வேண்டும். மழை வளம் அதிகரிக்க அதிக எண்ணிக்கையிலான மரங்களை வளர்க்க வேண்டும். நீர் மாசுபடாமல் பாதுகாக்க வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் உப்புத் தண்ணீர் உட்புகுதல் தன்மை அதிகரித்து வருகிறது. கோட்டூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஒன்றியங்களில் முக்கியமாக குடிநீர்த் தரம் குறைந்த பகுதியாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு அரிச்சந்திராநதி, முள்ளியாறு, பாமணியாறு, கோரையாறு ஆகியவற்றில் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது என்றார் ஜீவகனி.

கருத்தரங்கில் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு நீர் பரிசோதனை பெட்டியையும் ஜீவகனி வழங்கினார்.

கருத்தரங்கில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கருணாகரன், விசுவநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தொடர் மழையால் பாதிக்கப்பட் டடெல்டா விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க காங் . வலியுறுத்தல்**

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளை இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவித்து, அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து முதல்வருக்கு காங்கிரஸ் விவசாயப் பிரிவு மாநில பொதுச் செயலர் டி. ராஜதுரை சனிக்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடாததால், செப். 17-ல் திறக்கப்பட்ட மேட்டூர் அணையின் குறைந்தளவு நீர் கடைமடை பகுதியை சென்றடையவில்லை. தண்ணீர் பற்றாக்குறைக்கிடையே டெல்டா மாவட்டங்களில் விதைப்பு, நடவுப் பணிகள் தொடங்கப்பட்டாலும், விவசாயிகளுக்கு தேவையான கடனுதவிகளை வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் வழங்கவில்லை. மேலும், முதல்வரின் விவசாய ஊக்குவிப்பு மானிய திட்ட சலுகைகளும் கிடைக்கவில்லை.

ஏற்கெனவே குறுவை பாதிக்கப்பட்ட நிலையில், அண்மையில் பெய்த பலத்த மழையால் சம்பா சாகுபடியும் தொடக்க நிலையிலேயே பாதிப்புக்குள்ளாகி உள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரமும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ. 10 ஆயிரமும் தமிழக அரசு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இயற்கை இடர்பாடுகளிலிருந்து விவசாயத்தை பாதுகாக்கவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், விவசாய உற்பத்தியை அதிகரித்திடவும் மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசு தொலைநோக்கு திட்டங்களை வகுத்திட வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளார்.'

## டெல்டா விவசாயிகளுக்கு நிவாரணம் : காங்கிரஸ் வலியுறுத்தல்

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளை இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவித்து, அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்க வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து முதல்வருக்கு காங்கிரஸ் மாநில விவசாயப் பிரிவு பொதுச் செயலர் டி. ராஜதுரை சனிக்கிழமை அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

தண்ணீர் பற்றாக்குறைக்கிடையே டெல்டா மாவட்டங்களில் விதைப்பு, நடவுப் பணிகள் தொடங்கப்பட்டாலும், விவசாயிகளுக்கு தேவையான கடனுதவிகளை வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் வழங்கவில்லை.

மேலும், முதல்வரின் விவசாய ஊக்குவிப்பு மானிய திட்ட சலுகைகளும் கிடைக்கவில்லை.

ஏற்கெனவே குறுவை பாதிக்கப்பட்ட நிலையில், அண்மையில் பெய்த பலத்த மழையால் சம்பா சாகுபடியும் தொடக்க நிலையிலேயே பாதிப்புக்குள்ளாகி உள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரமும், விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா ரூ. 10 ஆயிரமும் தமிழக அரசு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளார்.

## கரும்பு கொள்முதல் டன்னுக்கு ரூ.3 ஆயிரம் வழங்கக் கோரிக்கை

புதுச்சேரியில் கரும்பு கொள்முதல் டன்னுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் என அகில இந்திய விவசாயிகள் சங்க புதுச்சேரி பிரதேச குழு வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் என்.ரங்கசாமிக்கு அக்குழுவினர் அளித்த கடித விபரம்:

புதுச்சேரி மாநிலத்தில் கரும்பு விவசாயிகள், கடும் அதிருப்தியால் கரும்பு சாகுபடியைக் கைவிடும் நிலைக்குச் சென்றுக் கொண்டிருக்கின்றனர்.

கட்டுபடியாகாத விலை, உரத்தட்டுப்பாடு, உரம் விலை உயர்வு, உரிய காலத்தில் வெட்டு உத்தரவு இல்லாதது, உரிய காலத்தில் பணப்பட்டுவாடா செய்யாதது, எடை மோசடி, கரும்புக்கரணை மானியமின்மை, வெட்டுக்கூலி, வண்டி வாடகை உயர்வு ஆகியவற்றால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, 2011-12ம் ஆண்டு அனுப்பிய கரும்புக்கு டன்னுக்கு ரூ.3 ஆயிரமும், 2012-13ம் ஆண்டு அனுப்பும் கரும்புக்கு டன்னுக்கு ரூ.3,500ம் வழங்க வேண்டும்.

உரிய காலத்தில் வெட்டு உத்தரவு வழங்கி, கரும்பு அனுப்பிய 14 நாள்களுக்குள் பணப்பட்டுவாடா செய்ய வேண்டும்.

தாமதமானால் 14 விழுக்காடு வட்டியோடு தர வேண்டும்.

விவசாயிகள் வங்கியில் வாங்கிய கடனுக்கு, கரும்பு விவசாயிகளிடம் பிடித்தம் செய்த பணத்தை வட்டியுடன் செலுத்தி, மறு கடனுக்கு தடையில்லாச் சான்று வழங்க வேண்டும்.

சொந்த பணத்தைச் செலுத்தியிருந்தால், வட்டியை நிர்வாகம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். எடை மோசடியைத் தவிர்க்க, சர்க்கரை எடைபோடும் மேடையில் கரும்பையும் எடையிட வேண்டும்.

தீபாவளி கூடுதல் ஊக்கத்தொகையாக டன்னுக்கு ரூ.400, டன்னுக்கு அரை கிலோ சர்க்கரையும் வழங்க வேண்டும்.

விவசாயிகள் கேட்கும் கரும்புக்கரணையை மானியத்துடன் வழங்க வேண்டும். புதுச்சேரியில் உள்ள இரண்டு ஆலைகளுக்கும் கரும்புக்கான விலையை ஒன்றாக நிர்ணயிக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மானிய விலையில் உளுந்து விதை

கடலூர், தூக்கணாம்பாக்கம், கீழ்குமாரமங்கலம் வேளாண் விரிவாக்க மையத்தில் உயர் ரக உளுந்து விதைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் பொ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

÷அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: கடலூர் வட்டார கிராமப் பகுதியில் கார்த்திகைப் பட்டத்தில் தனி மற்றும் ஊடுப் பயிராக உளுந்து சாகுபடி செய்கின்றனர். இப்பருவத்துக்கு ஏற்ற வம்பன்-3, ஏடீடி-5 சான்று பெற்ற விதைகள் மேற்கண்ட வேளாண் விரிவாக்க மையத்தில் போதுமான அளவு இருப்பு உள்ளது. விதை கிராம திட்டத்தில் ஒரு ஏக்கருக்கான விதையை 50 சதவீத மானியத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

÷மேலும் விதை நேர்த்தி செய்வதற்கு ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களும் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

÷உயிர் உரங்கள் மூலம் விதை நேர்த்தி செய்வதால் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து வேர் முடிச்சுகளில் சேமித்து வைக்கிறது.

÷உயிர் உரங்களால் வெளியிடப்படும் பைரோட்டின், இன்டோல் அசிட்ரிக் அமிலம் போன்ற என்சைம்கள் பயிர் வளர்ச்சி ஊக்கியாக செயல்பட்டு 15-20 சதவீதம் மகசூல் அதிகப்படுத்துவதுடன் மண் வளத்தைப் பாதுகாக்கிறது என பொ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

12.11.2012 A.M

**சம்பா பயிருக்கு "இன்சூரன்ஸ் ' வேளாண்மை அதிகாரி தகவல்**

தஞ்சாவூர்: "தஞ்சை மாவட்டத்தில் சம்பா பயிருக்கு இடர்ப்பாடு காலத்தில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்கும் வகையில், டிச., 15ம் தேதிக்குள் காப்பீடு செய்து விவசாயிகள் பயன்பெறலாம்' என, வேளாண்துறை இணை இயக்குனர் முகமது யாகியா விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து, தஞ்சை மாவட்ட வேளாண்துறை இணை இயக்குனர் முகமது யாகியா விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள் அனைவரும் நடப்பு சம்பா பருவத்தில் நெல் சாகுபடி பணியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். சமீபத்தில் நிலம் புயல் மழையால் தஞ்சையில் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. என்றாலும், இனிமேல் எதிர்பாராமல் இயற்கை சீற்றங்களால் நெற்பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால், நஷ்டத்திலிருந்து காத்துக்கொள்ள தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்து பயன்பெறலாம். கடன்பெறாத சிறு, குறு விவசாயிகள் அரசு வழங்கும் காப்பீடு பிரிமீயம் மானியம் போக ஏக்கருக்கு, 78 ரூபாயும், பிற விவசாயிகள் ஏக்கருக்கு, 87 ரூபாயும் செலுத்த வேண்டும். காப்பீடு செய்த விவசாயிகளுக்கு, இயற்கை இடர்ப்பாடு காலங்களில் உத்தரவாத தொகையாக, 8,692 ரூபாய் வழங்கப்படும். எனவே, இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும் வகையில், அதற்குரிய படிவத்தை பூர்த்தி செய்து, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தொகைØ ய, கடன் பெறாத விவசாயிகள் டிச., 15ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

**மக்காச்சோளத்தை இருப்பு வைத்துவிவசாயிகள் கடன் பெறலாம்**

தேனி:விவசாயிகள் மக்காச்சோளத்தை இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெறலாம் என தேனி ஒழுங்குமுறை விற்பனைக்கூட மார்க்கெட் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.போடி காமராஜபுரம், மாணிக்காபுரம், சடையால்பட்டி கிராமங்களில் மக்காச்சோளம் அறுவடை நடந்து வருகிறது. விளைச்சல் நல்ல முறையில் இருப்பதால் மக்காச்சோள வரத்து அதிகம் உள்ளது. அறுவடை செய்த மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்றால் அதிக லாபம் கிடைக்கும். விவசாயிகள் தேனி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள உலர் களத்தினை பயன்படுத்தி மக்காச்சோளத்தை உலர வைத்து, விற்பனை கூட கிட்டங்கியில் இருப்பு

வைக்கலாம்.விளைபொருளை இருப்பு வைக்கும் விவசாயிகள், விளைபொருள் மதிப்பில் 75 சதவீதம், கடன் பெறலாம். இதற்கு 5 சதவீதம் மட்டும் வட்டி வசூலிக்கப்படுகிறது. ஒரு விவசாயி அதிகபட்சமாக 2 லட்சம் ரூபாய் கடன் பெறலாம். ஒழுங்குமுறை விற்பனைக்குழு செயலாளர் முருகன் கூறியதாவது:விவசாயிகள் அதிகபட்சமாக 120 நாட்களுக்கும், சிறப்பு அனுமதியின் பேரில் 180 நாட்களுக்கும் பொருட்களை இருப்பு வைக்கலாம். விருப்பமுள்ள விவசாயிகள் கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல், இருப்பிட சான்றுடன் விவசாயிகள் தேனி ஒழுங்குமுறை விற்பனைகூடம் மார்க்கெட் கண்காணிப்பாளரை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

## கரும்பு சாகுபடி பயிற்சி

தேவதானப்பட்டி:வைகை அணை ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலையில், கரும்பு விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேலாளர் ஜெயராம் ஆராய்ச்சிப்பணிகள் பற்றியும், உதவிபொது மேலாளர் தங்கராஜ் ஆலையின் செயல்பாடுகள் குறித்தும், துணை பொது மேலாளர் வெற்றிவேல் கரும்பு விரிவாக்க செயல்பாடுகள் பற்றி விளக்கினர்.கரும்பு உற்பத்தியை அதிகப்படுத்துதல், செலவினங்களை குறைத்தல், பரு செதில் நாற்று உற்பத்தி, இயந்திரங்களின் பயன்பாடு, சொட்டுநீர்பாசனம் மற்றும் பராமரிப்பு, நுண்ணுயிர் உரங்கள், பூச்சி, நோய் தாக்குதல், கட்டுப்படுத்தும் முறை பற்றி விளக்கப்பட்டது. பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு, வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம் சான்றிதழ் வழங்கினார். மேலாளர் சிவாஜிகணேசன் நன்றி கூறினார்

## விதை உற்பத்தியாளர் , சாகுபடியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம்

தாராபுரம்: தாராபுரம் வேளாண்மைத்துறை சார்பில், "ஆத்மா" திட்டத்தின் மூலம் தனியார் விதை உற்பத்தியாளர்கள், சாகுபடியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது.
வேளாண்மை உத இயக்குனர் வெங்கடாசலம் முன்னிலை வகித்தனர். ஈரோடு விதை சான்று உதவி இயக்குனர் மகாதேவன் தலைமை வகித்து பேசியதாவது:
சான்று பெற்ற விதைகள் அதிக முளைப்பு திறன், அதிக புறத்தூய்மை, இனத்தூய்மை, அளவானஈரப்பதம் கொண்டது. நல்ல முளைப்புத்திறன், தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூத்து முதிரும், கலப்படமில்லாத அதிக மகசூல், விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். தொழில்நுட்பங்களை நன்றி புரிந்து செயல்பட்டால் சான்று விதையால் உற்பத்தி அதிகரிக்கும். விதை சான்றளிப்புத்துறை, அங்ககச் சான்றளிப்புத்துறையானது விதை சான்று, விதை சட்ட அமுலாக்கம், விதை பரிசோதனை, பயிற்சி, அங்கச் சான்றளிப்பு போன்ற பணிகளை செயல்படுத்தி வருகிறது.இவ்வாறு அவர் பேசினார். விதைசான்று அலுவலர் மாரிமுத்து பேசியாதவது: விதை உற்பத்தி தொழில்நுட்பம், வல்லுனர் விதை, ஆதாரநிலை, சான்று நிலை விதை எவ்வாறு உற்பத்தி குறித்தும் சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கு விதைப்பண்ணைகள் அமைக்கப்படவேண்டும். இது குறித்து

பதிவு செய்யவேண்டும். பதிவு செய்த பண்ணைகளை அப்பகுதி விதை சான்று அலுவலர் பூப்பருவத்திலிருந்து பயிர் முதிர்ச்சி நிலையிலும் ஆய்வு செய்யப்படுகிறது. கலன்கள் தென்படின் அவற்றை காலத்தே அகற்ற அலுவலர் அறிவுரை வழங்குவார். அதன்படி விதைஉற்பத்தியாள மற்றும் சாகுபடியாளர் கலவன்களை அகற்றி வயல் தரத்தை பேணவேண்டும். சுத்தி நிலையங்களில் வயல்மட்ட மற்றும் சுத்திசெய்த விதைகளை தனித்தனியாக குவியல் வாரியாக இருப்பு வைக்க வேண்டும். இதனால், விதைகள் கலப்படம் ஏற்படுவதை தவிர்க்கலாம். விதை தரங்களில் தேறிய விதைக்குவியல்களுக்கு சான்றட்டைகள் வழங்கப்பட்டு சான்றட்டை பொருத்தும்பணி மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார். முகாமில் விதை உற்பத்தியாளர்கள், விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

## அதிக பனிப்பொழிவால் கருகும் தேயிலை செடிகள்

குன்னூர்:பனியின் தாக்கம் அதிகரித்துள்ளதால், நீலகிரி மாவட்டத்தில் தேயிலை செடிகள் கருகி வருகின்றன.

நீலகிரியில், வட கிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் துவங்கி, நவம்பர் இரண்டாம் வாரம் வரை பெய்யும். பின்னர் துவங்கும் பனியின் தாக்கம், ஜனவரி மாதம் வரை நீடிக்கும். வழக்கத்துக்கு மாறாக இந்தாண்டு, நவம்பர் மாத துவக்கத்திலேயே நீர் பனிப்பொழிவு காணப்பட்டது. இரவு நேரங்களில் கடும் குளிர் நிலவுகிறது. ஊட்டி, குன்னூர் பகுதிகளில் பனியின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால், இப்பகுதியில் உள்ள தேயிலை செடிகள் கருகத் துவங்கியுள்ளன. இதனால், பசுந்தேயிலை வரத்து குறைந்துள்ளது.

தேயிலை விவசாயிகள் கூறுகையில், ""குன்னூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், ஊட்டியை விட பனியின் தாக்கம் குறைவாகவே இருக்கும். இந்தாண்டு, எதிர்பார்ப்புக்கு மாறாக தென் மேற்கு பருவ மழை மற்றும் வட கிழக்கு பருவ மழை பொய்த்துவிட்டது. இதனால், குன்னூரில் பனியின் தாக்கம் கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். இதனால் தேயிலை செடிகள் தான் பாதிக்கப்படும்," என்றனர்.

## கால்நடை பாதுகாப்பு முகாம் 100 மாடுகளுக்கு "தடுப்பூசி '

க.பரமத்தி: அரசு கால்நடை மருந்தகம் சார்பில் நடந்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமில், ஆடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. க.பரமத்தி யூனியன், நடந்தை பஞ்சாயத்து அலுவலகம் அருகே, க.பரமத்தி கால்நடை மருந்தகம் சார்பில், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி தலைமை வகித்தார். பரமத்தி கால்நடை டாக்டர் உஷா வரவேற்றார். நடந்தை பஞ்சாயத்து தலைவர் விஜயகுமார், துணைத்தலைவர் ராமசாமி முன்னிலை வகித்தனர். கால்நடை டாக்டர்கள் தமிழரசன், மோகன்ராஜ், கால்நடை ஆய்வாளர் கிருஷ்ணன் மற்றும் உதவியாளர் மேரி ஆகியோர் கொண்ட

குழுவினர், 100கக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி, 500க்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தனர்

**விவசாய தொழிலாளருக்கு குழுமூரில் பயிற்சி முகாம்**

அரியலூர்: குழுமூரில் விவசாய தொழிலாளர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது.
அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுகா, குழுமூர் கிராமத்தில், ஆனைவாரி ஓடை உபவடி நிலப்பகுதி விவசாய தொழிலாளர்களுக்கான பயிற்சி முகாம், கலெக்டர் செந்தில்குமார் தலைமையில் நடந்தது. வேளாண்து றை சார்பில் நடந்த பயிற்சி முகாமில், வேளாண்துறை இணை இயக்குனர் (பொ) சேகர் வ ரவே ற்றார். பயிற்சி முகாமில் வேளா ண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில், 27 பயனாளிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்களை வழங்கி, கெ லக்டர் செந்தில்குமார் பேசினார்.
நிகழ்ச்சியில் வேளாண்துறை துணை இயக்குனர் இளங்கோவன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சௌந்தர்ராஜன், உழவர் பயிற்சி நிலைய து ணை இயக்குனர் ஆல்பர்ட், வி தை சான்றுத்துறை துணை இயக்குனர் முரளிதரன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மாரிமுத் து, வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகரன், செந்துறை பஞ்.,யூனியன் சேர்மன் செல்வராஜ், மாவட்ட பஞ்., கவுன்சிலர்கள் குணசேகரன், தேன்மொழி, குழுமூர் பஞ்சாயத்து தலைவர் இஸ்மாயில், ஏரி பாசனதாரர்கள் சங்க தலைவர் சிவஞானகுரு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
*கட்டயன்குடிக்காட்டில், வேளாண்து றை சார்பில், நடந்த திருந்திய நெல் சாகுபடி திட்ட த்தை பார்வையிட்ட கலெ க்டர் செந்தில்குமார், நல்லநாயகபுரத் தில், தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நடந்த விவசாயிகளுக்கான செயல் விளக்கத்தையும் பார்வையிட்டார்.

**பட்டு வளர்ச்சித்துறைஅதிகாரிகளுக்கு ஜீப்கள்**

சங்கராபுரம்:பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குனர்களுக்கு புதிய ஜீப்களை அமைச்சர் மோகன் வழங்கினார்.சங்கராபுரத்தில் நேற்று முன் தினம் அரசின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. அங்கு விழுப்புரம், கோவை, வேலூர் பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர்களுக்கு புதிய ஜீப்களை ஊரக தொழில்துறை அமைச்சர் மோகன் வழங்கினார்.விழுப்புரம் பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் விஸ்வநாதன், இணை இயக்குனர் சாம் தேவதாஸ், துணை இயக்குனர் கோலப்பா பிள்ளை கலந்து கொண்டனர்.

**பார்த்தீனிய செடிகளை அழிக்கவேளாண் அதிகாரி அறிவுரை**

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை பகுதியில் அதிகளவில் வளர்ந்துள்ள பார்த்தீனிய செடிகளை அழிக்க விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அறிவுரை கூறினர்.உளுந்தூர்பேட்டை அடுத்த எறையூர் கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி பயிர்களை வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி ஆய்வு செய்தார். துணை வேளாண் அலுவலர் அலெக்சாண்டர், விரிவாக்க அலுவலர்

பொன்காமராஜ், உதவி வேளாண் அலுவலர் ராஜகண்ணு உடனிருந்தனர்.அப்போது மனித உடலுக்கு ஊர் விளைவிக்கக் கூடியதும், தீமை தரக் கூடியதுமான பார்த்தீனிய செடிகள் எறையூரில் வளர்ந்திருந்ததை பார்வையிட்ட அதிகாரிகள் உடனடியாக அழிக்க விவசாயிகளுக்கு அறிவுரை கூறினர்.இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் கருணாநிதி கூறுகையில்,பார்த்தீனிய செடி மனிதன், கால்நடைகளின் உடலில் படும்போது தோல்களில் அரிப்பு ஏற்படும். கால்நடைகள் உண்பதால் உயிர் இழப்பு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.எனவே இச்செடிகளை பூப்பதற்கு முன்பாகவே பிடுங்கியும், 2-4டி கலைக்கொல்லி, சாதாரண உப்பு கரைசலை (சோடியம் குளோரைடு) 2 சதவீதம் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**உயர் ரக முந்திரியால் இரு மடங்கு லாபம் தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்**

உளுந்தூர்பேட்டை:உயர் ரக முந்திரி பயிரிடுவதால் இரு மடங்கு லாபம் கிடைக்கும் என விவசாயிகளுக்கு தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு தெரிவித்தார்.உளுந்தூர்பேட்டை அடுத்த செங்குறிச்சி கிராமத்தில் பயிரிடப்பட்டுள்ள உயர்ரக முந்திரி (வி.ஆர்.ஐ.,) செடிகளை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் ராசு ஆய்வு செய்தார்.அப்போது விவசாயிகளிடம் துணை இயக்குனர் ராசு பேசியதாவது: வி.ஆர்.ஐ., உயர் ரக முந்திரி மூன்று ஆண்டுகளில் வளர்ந்து மூன்று மடங்கு உற்பத்தியுடன், இரு மடங்கு லாபத்தை கொடுக்கும். செடிகள் வளர்ந்த பின்னர் இடையே ஊடு பயிர் செய்தும் வருமானம் ஈட்டலாம்.
ஒரு செடியில் 75 கிலோ வரை முந்திரி கிடைக்கும். ஏக்கருக்கு 80 கன்றுகளை நட வேண்டும். நடவு செய்வதற்கு உயிர் உரங்கள், சொட்டு நீர் பாசனம், முந்திரி செடிகள் 90 சதவீத மான்யத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

இதற்காக விவசாயிகள் குழு அமைத்து 50 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.தோட்டக்கலைத்துறையில் பல்வேறு மான்ய திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்தி கொண்டு பயனடையலாம். விவசாயிகள் குழு அமைத்து பயன்பெறலாம்.இவ்வாறு துணை இயக் குனர் ராசு தெரிவித்தார்.ஆய்வின்போது தோட்டக்கலை உதவி அலுவலர்கள் ஜோதிராமலிங்கம், கொளஞ்சி, மானாவாரி புஞ்சை நில மேம்பாட்டு சங்க தலைவர் ஏழுமலை, செயலாளர் கந்தசாமி, பொருளாளர் செல்வராசு, விவசாயி கண்ணாயிரம் உடனிருந்தனர்.

**வறட்சியால் கால்நடை தீவனமான வாழை :சாகுபடி செய்த விவசாயிகள் கடும் விரக்தி**

மேட்டூர்: பத்தாண்டுக்கு பின்பு ஏற்பட்டுள்ள வறட்சியால், கொளத்தூர் பகுதியில் சாகுபடி செய்த வாழைகள், கால்நடை தீவனமாக மாறியுள்ளது. அதனால், விவசாயிகள் வேதனையில் உள்ளனர். சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் செட்டியூர், கண்ணாமூச்சி, பண்ணவாடி, லக்கம்பட்டி, தண்டா, ஏழரை மத்திக்காடு உள்ளிட்ட பகுதியில் ஆண்டுதோறும் ஐந்து லட்சம்

முதல் ஏழு லட்சம் வாழைகளை, விவசாயிகள் சாகுபடி செய்வது வழக்கம்.
கொளத்தூர் பகுதியில், பெரும்பாலான விவசாயிகள், போர்வெல் மற்றும் கிணற்று பாசனத்தை நம்பியே வாழை சாகுபடி செய்கின்றனர். நடப்பாண்டு கொளத்தூர் அடுத்த செட்டியூர், சாமியார்காடு, காஞ்சிரங்காடு சுற்றுப்பகுதியில், விவசாயிகள், கதலி ரக வாழை சாகுபடி செய்தனர். இந்நிலையில், தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால் செட்டியூர் சுற்றுப்பகுதியில், நிலத்தடி நீர் வெகுவாக குறைந்தது. இதனால், நான்கு மாதத்தில் அறுவடைக்கு வர வேண்டிய வாழை மரங்கள், தண்ணீர் பற்றாக்குறையால், கருகி வருகிறது. தண்ணீர் பற்றாக்குறையால், வாழைகளை காப்பற்ற முடியாது என்பதால், சாகுபடி செய்த ஆறு மாதமாக வாழை மரங்களை, கால்நடைகளை விட்டு மேய்க்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறையால், நடப்பாண்டு சாகுபடி செய்த வாழைகள் கருகுவது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.இதுகுறித்து விவசாயி பழனி கூறியதாவது:
பத்து ஆண்டுகளாக, நாங்கள் வாழை சாகுபடி செய்கிறோம். ஒவ்வொரு முறையும், வாழைத்தார்களை அறுவடை செய்து விற்பனை செய்துள்ளோம். ஆனால், பத்தாண்டுக்கு பின்பு வறட்சியால் வாழை மரங்கள் தற்போது கருக ஆரம்பித்துள்ளது. இதனால், 800 வாழை சாகுபடி செய்த எங்களுக்கு, 40 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வரும் ஆண்டில், வாழை சாகுபடி செய்யமாட்டோம். இவ்வாறு அவர் கூறினார். நிலத்தடி நீர் பற்றாக்குறையால், அருகிலுள்ள பழனிச்சாமி என்பவர் நிலத்தில், 1,500 வாழைகள் உள்பட சுற்றுப்பகுதியில், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகள் கருகியுள்ளது, விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது

## வியாபாரிகள் புறக்கணிப்பு மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்க இருந்த மஞ்சள் ஏலத்தில், வியாபாரிகள் கலந்து கொள்ளாமல் புறக்கணித்ததால், ஏலம் ஒத்திவைக்கப்பட்டது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வார தினங்களில் பருத்தி, மஞ்சள் மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடக்க இருந்த மஞ்சள் ஏலத்துக்கு, திருவண்ணாமலை, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய வெளிமாவட்டம், ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளைவித்த மஞ்சள் மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஏலத்துக்கு, 150க்கும் மேற்பட்ட மஞ்சள் மூட்டைகளை, விவசாயிகள் கொண்டு வந்தனர். குறைந்தளவு மஞ்சள் மூட்டைகள் வந்திருப்பதை அறிந்த வியாபாரிகள், ஏலத்தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர். கூட்டுறவு சங்க அலுவலர்கள், ஏலத்தை ரத்து செய்து, ஒத்திவைத்தனர். அதனால், நேற்று முன்தினம் நடக்க இருந்த, மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

விவசாயிகள், விற்பனைக்கு கொண்டு வந்த, 150 மூட்டை மஞ்சளை, கூட்டுறவு சங்க குடோனில் இருப்பு வைத்துச் சென்றனர்.

**வறட்சியால் கால்நடை தீவனமான வாழை :சாகுபடி செய்த விவசாயிகள் கடும் விரக்தி**

மேட்டூர்: பத்தாண்டுக்கு பின்பு ஏற்பட்டுள்ள வறட்சியால், கொளத்தூர் பகுதியில் சாகுபடி செய்த வாழைகள், கால்நடை தீவனமாக மாறியுள்ளது. அதனால், விவசாயிகள் வேதனையில் உள்ளனர். சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் செட்டியூர், கண்ணாமூச்சி, பண்ணவாடி, லக்கம்பட்டி, தண்டா, ஏழரை மத்திக்காடு உள்ளிட்ட பகுதியில் ஆண்டுதோறும் ஐந்து லட்சம் முதல் ஏழு லட்சம் வாழைகளை, விவசாயிகள் சாகுபடி செய்வது வழக்கம்.

கொளத்தூர் பகுதியில், பெரும்பாலான விவசாயிகள், போர்வெல் மற்றும் கிணற்று பாசனத்தை நம்பியே வாழை சாகுபடி செய்கின்றனர். நடப்பாண்டு கொளத்தூர் அடுத்த செட்டியூர், சாமியார்காடு, காஞ்சிரங்காடு சுற்றுப்பகுதியில், விவசாயிகள், கதலி ரக வாழை சாகுபடி செய்தனர்.

இந்நிலையில், தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை போதிய அளவில் பெய்யாததால் செட்டியூர் சுற்றுப்பகுதியில், நிலத்தடி நீர் வெகுவாக குறைந்தது. இதனால், நான்கு மாதத்தில் அறுவடைக்கு வர வேண்டிய வாழை மரங்கள், தண்ணீர் பற்றாக்குறையால், கருகி வருகிறது.

தண்ணீர் பற்றாக்குறையால், வாழைகளை காப்பற்ற முடியாது என்பதால், சாகுபடி செய்த ஆறு மாதமாக வாழை மரங்களை, கால்நடைகளை விட்டு மேய்க்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறையால், நடப்பாண்டு சாகுபடி செய்த வாழைகள் கருகுவது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து விவசாயி பழனி கூறியதாவது:

பத்து ஆண்டுகளாக, நாங்கள் வாழை சாகுபடி செய்கிறோம். ஒவ்வொரு முறையும், வாழைத்தார்களை அறுவடை செய்து விற்பனை செய்துள்ளோம். ஆனால், பத்தாண்டுக்கு பின்பு வறட்சியால் வாழை மரங்கள் தற்போது கருக ஆரம்பித்துள்ளது. இதனால், 800 வாழை சாகுபடி செய்த எங்களுக்கு, 40 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வரும் ஆண்டில், வாழை சாகுபடி செய்யமாட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிலத்தடி நீர் பற்றாக்குறையால், அருகிலுள்ள பழனிச்சாமி என்பவர் நிலத்தில், 1,500 வாழைகள் உள்பட சுற்றுப்பகுதியில், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகள் கருகியுள்ளது, விவசாயிகளுக்கு கடும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

**விலை உயர்வை தடுக்க 65 லட்சம் டன் கோதுமை**



புதுடில்லி: மத்திய அரசு, உள்நாட்டில் விலை உயர்வைத் தடுத்து, உபரி கையிருப்பை குறைக்கும் வகையில், 65 லட்சம் டன் கோதுமையை, ஆலைகள் மற்றும் பிஸ்கட் தயாரிப்பு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது.இதுதவிர, நாபெட், என்.சி.சி.எப்., மற்றும் கேந்திரிய பந்தர் ஆகிய அமைப்புகள் மூலம், கூடுதலாக, தலா, 5 லட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையை சில்லறை விற்பனைக்கு அனுமதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலை, பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு வழங்கியுள்ளது.உள்நாட்டு மொத்த விற்பனை சந்தையில், சில்லறை விலையில், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை, 21 ரூபாயாக உள்ளது. அதேசமயம், இதற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 12.85 ரூபாயாக உள்ளது.சென்ற 2011-12ம் பயிர் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் கோதுமை உற்பத்தி,

9.39 கோடி டன் என்ற அளவில் அதிகரித்து இருந்தது. இதன் காரணமாக, மத்திய அரசின், கோதுமை கொள்முதல், முன் எப்போதும் இல்லாத அளவாக, 3.81 கோடி டன் என்ற அளவில் மிகவும் அதிகரித்து காணப்பட்டது.நடப்பாண்டு அக்டோபர் வரையிலான காலத்தில், மத்திய அரசின் தொகுப்பில், 4.05 கோடி டன் கோதுமை கையிருப்பு உள்ளது.

## இயற்கை ரப்பர் பயன்பாடு 83 ஆயிரம் டன்



புதுடில்லி: நடப்பாண்டு அக்டோபர் மாதத்தில், நாட்டின் இயற்கை ரப்பர் பயன்பாடு, 83 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின், இதே மாத பயன்பாட்டை (76,495 டன்) விட, 9 சதவீதம் அதிகமாகும் என, ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.கணக்கீட்டு காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 3 சதவீதம் குறைந்து, 89,300 டன்னிலிருந்து, 86,300 டன்னாக சரிவடைந்துள்ளது. இதன் இறக்குமதி, இரண்டு மடங்கிற்கும் மேல் உயர்ந்து, 8,574 டன்னிலிருந்து, 18,326 டன்னாக அதிகரித்துள்ளது. இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 63 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 1,107 டன்னிலிருந்து, 2,981 டன்னாக சரிவடைந்துள்ளது.நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான, ஏழு மாத காலத்தில், இயற்கை ரப்பர் பயன்பாடு, 5.84 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற நிதியாண்டின், இதே காலத்தில், 5.51 லட்சம் டன்னாக குறைந்து காணப்பட்டது. மதிப்பீட்டு காலத்தில், இயற்கை ரப்பர் உற்பத்தி, 4.80 லட்சம் டன்னிலிருந்து, 4.82 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதன் இறக்குமதி, 99,760 டன்னிலிருந்து, 1.31 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதேசமயம், இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 21,064 டன்னிலிருந்து, 8,573 டன்னாக சரிவடைந்துள்ளது.சென்ற அக்டோபர் மாதம் வரையிலுமாக, நாட்டின், இயற்கை ரப்பர் கையிருப்பு, 2.45 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது என, ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.

## சர்வதேச கறுப்பு தேயிலை உற்பத்தி 3 சதவீதம் குறைவு



குன்னூர்: நடப்பு 2012ம் காலாண்டர் ஆண்டில், செப்டம்பர் மாதம் வரையிலுமாக, சர்வதேச கறுப்பு தேயிலை உற்பத்தி, 143 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின், இதே காலத்தில்,மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை (147 கோடி கிலோ) விட, 2.85 சதவீதம் குறைவாகும் என, சர்வதேச தேயிலை வர்த்தகர்கள் தெரிவித்து உள்ளனர்.மதிப்பீட்டு காலத்தில், கென்யாவின் கறுப்பு தேயிலை உற்பத்தி, 1.19 கோடி கிலோ குறைந்து, 24.79 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. இந்தியாவின், கறுப்பு தேயிலை உற்பத்தி, 1.04 கோடி கிலோ குறைந்து, 77.26 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.உகண்டாவில், இதன் உற்பத்தி, 89.80 லட்சம் குறைந்து, 2.20 கோடி கிலோவாகவும், இந்தோனேஷியாவின் உற்பத்தி, 63 லட்சம் கிலோ குறைந்து, 4.02 கோடி கிலோவாகவும் குறைந்துஉள்ளன.இலங்கையில் கறுப்பு தேயிலை உற்பத்தி, 34 லட்சம் கிலோ சரிவுஅடைந்து, 24.17 கோடி கிலோவாகவும், மாலதீவு உற்பத்தி, 15 லட்சம் கிலோ குறைந்து, 3.56 கோடி கிலோவாகவும் குறைந்துள்ளன.அதேசமயம், வங்கதேசத்தில் மட்டும், கறுப்பு தேயிலை உற்பத்தி, 32.50 லட்சம் கிலோ உயர்ந்து, 4.36 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது.

## பருத்தி உற்பத்தி 3.54 கோடி பொதிகளாக இருக்கும்



மும்பை: நடப்பு வேளாண் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.54 கோடி பொதிகள் என்ற அளவில் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளதாக, இந்திய பருத்தி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், பருத்தி உற்பத்தி மற்றும் பயன்பாட்டில், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இந்தியாவில், நடப்பு வேளாண் பருவத்தில், பருவ மழை குறைந்துஉள்ளது.

இதனால், பருத்தி பயிரிடும் பரப்பளவு, முந்தைய ஆண்டை விட, 3 சதவீதம் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில், கையிருப்பில் உள்ள பருத்தியையும் சேர்த்து இதன் அளிப்பு, 4.17 கோடி பொதிகள் என்ற அளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், உள்நாட்டில், இதன் பயன்பாடு, 2.66 கோடி பொதிகள் என்ற அளவில் தான்

இருக்கும் என,தெரியவந்துள்ளது. இதையடுத்து, 1.51 கோடி பருத்தி பொதிகள் உபரியாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளதாக, இந்த கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

**அரிசி விலை குவிண்டாலுக்கு ரூ.200 அதிகரிப்பு**



சேலம்: தமிழகத்தில், மின்தடை காரணமாக, அரிசி உற்பத்தி குறைந்துள்ளதால், அதன் விலை, குவிண்டாலுக்கு, 200 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது.தமிழகத்தில், நெல்லுக்கு கடும் தட்டுப்பாடு நிலவும் நிலையில், நெல்லுக்கான கொள்முதல் விலையை, அரசு உயர்த்தியதன் எதிரொலியாக, அரிசி விலை உச்சத்தை எட்டி உள்ளது.தமிழக அரசு, கடந்த மாதம், ஒரு குவிண்டால் சாதாரண நெல்லுக்கு, 50 ரூபாயும், சன்னரக நெல்லுக்கு, 70 ரூபாயும் கூடுதலாக வழங்கப்படும் என, அறிவித்தது. இந்த அறிவிப்புக்கு பின், சாதாரண நெல்லின் கொள்முதல் விலை, 1,300 ரூபாயாகவும், சன்னரக நெல்லின் கொள்முதல் விலை, 1,350 ரூபாயாகவும் இருந்தது.

நெல் விலை உயர்ந்த நிலையில், அரிசி விலை, தற்போது அதிகரித்து வருகிறது. அது மட்டுமின்றி, மின்தடை காரணமாக, தமிழகத்தில் அரிசி உற்பத்தியில் ஈடுபட்டு வந்த, 7,332 அரிசி ஆலைகளில், 25 சதவீத ஆலைகளில் மட்டுமே உற்பத்தி நடக்கிறது.அந்த ஆலைகளும் மின்சாரத்துக்கு மாற்றாக, டீசலை பயன் படுத்தி, ஜெனரேட்டர் மூலம் அரிசி உற்பத்தியில் ஈடுபடுவதால், அரிசி விலையை உயர்த்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. வெள்ளை பொன்னி அரிசி பழசு, கிலோ, 49 முதல், 50 ரூபாய் வரை உயர்ந்து உள்ளது. பாபத்லா பொன்னி அரிசி விலை, 46 முதல் 48 ரூபாய் வரையும், கர்நாடக பொன்னி அரிசி,43 முதல், 45 ரூபாய் வரையும் அதிகரித்துள்ளது. அரிசி வியாபாரி சதீஷ் கூறியதாவது:தமிழகத்தில், அரிசி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், சமீபத்தில் ஏற்பட்ட, "நீலம்' புயலின் தாக்கம் காரணமாக, காரைக்குடி, வேதாரண்யம், நாகை மாவட்டங்களில் நெற்பயிர் நீரில் மூழ்கியதால், நெல் உற்பத்தியில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதை அறிந்து கொண்ட வியாபாரிகள், இருப்பு நெல்லை விற்பனைக்கு அனுப்ப மறுத்து

வருகின்றனர். அது மட்டுமின்றி, மின்தடை காரணமாக அரிசி உற்பத்தியில் ஏற்படும் கூடுதல் செலவை, அரிசி விலையில் ஏற்றுவதால், விலை உயர்ந்துள்ளது.அரிசி விலையை கட்டுப்படுத்தும் வகையில், மேற்கு வங்கம், சத்தீஸ்கர் மாநிலங்களில் இருந்து, தமிழக அரசு வரவழைத்துள்ள அரிசிக்கு, மக்களிடம் எதிர்பார்த்த அளவு வரவேற்பு இல்லை. இதன் காரணமாக, தற்போது அரிசி விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**உற்பத்தி குறைவால் சின்ன வெங்காயம் விலை உயர்வு**



ஆண்டிபட்டி: உற்பத்தி குறைவால், ஆண்டிபட்டி பகுதியில் சின்ன வெங்காயம் விலை அதிகரித்துள்ளது.ஆண்டிபட்டி சித்தயகவுண்டன்பட்டி, ஏத்தக்கோயில், சித்தார்பட்டி, பாலக்கோம்பை, ராஜதானி, சேவாநிலையம், தெப்பம்பட்டி கிராமங்களில் வெங்காய சாகுபடி நடக்கிறது. கடந்த ஆண்டு, விளைச்சல் குறைந்து, விலை அதிகரித்தது. இதையடுத்து, அதிக விலை கிடைக்கும் என, விவசாயிகள், அடுத்த பருவத்தில், வெங்காய சாகுபடியில் ஆர்வம் காட்டினர். இதைஅடுத்து, அபரிமிதமான உற்பத்தியால், தேக்கம் ஏற்பட்டு விலை சரிந்தது. நடப்பு பருவத்தில், வெங்காய சாகுபடி எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. சில மாதங்களுக்கு முன், நடவு செய்யப்பட்ட பயிர், பலன் தரும் நிலையில், மழையால் பாதிக்கப்பட்டது.இப்பகுதியில், தினமும், 10 ஆயிரம் கிலோ வெங்காயம் உற்பத்தியாகும். தற்போது, 1,500 கிலோவாக குறைந்துள்ளது. இதனால், இதன் விலை உயர்ந்துள்ளது. ஆண்டிபட்டி பகுதியில், ஒரு கிலோ வெங்காயம், 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

12.11.2012 A.M

**தாராபுரம் பகுதியில் சின்ன வெங்காயம் கிலோ ரூ.50க்கு விற்பனை**



தாராபுர : சின்ன வெங்காயம் விலை கிடுகிடுவென உயர்ந்தது. தற்போது கிலோ ரூ.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. திருப்பூர் மாவட்டம் தாராபுரம், குண்டடம், கோவிந்தாபுரம், சின்னப்புத்தூர், நாரணாபுரம், மேட்டுக்கடை, சூரியநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கரில் சின்னவெங்காயம் தொடர்ந்து சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது பிஏபி வாய்க்கால் அமராவதி புதிய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், விவசாயிகள் வெங்காய சாகுபடியை நிறுத்தி விட்டு நெல் மற்றும் மக்காச்சோள சாகுபடிக்கு மாற தொடங்கினர்.

இதனால், கடந்த பருவத்தில் மகசூல் செய்யப்பட்ட வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வந்து கொண்டுள்ளது. வரத்து குறைந்ததால், விலையும் அதிகரித்தது. ஒரு கிலோ சின்ன வெங்காயம் கடந்த வாரம் ரூ.35க்கு விற்பனையானது. தற்போது பண்டிகை காலத்தை முன்னிட்டு கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை விற்பனையாகிறது. ஜனவரி மாதம் மீண்டும் வெங்காய உற்பத்தி துவங்க

உள்ளது. எனவே, அடுத்து வரும் 2 மாதங்களுக்கு வெங்காயத்தின் விலை அதிகரிக்குமே தவிர குறைய வாய்ப்பில்லை.

**காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து 12,000 கனஅடி நீர் திறப்பு**



மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 12,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக கடந்த ஒரு வாரகாலமாக, மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு 8,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், டெல்டா மாவட்டங்களில் பாசனத் தேவை அதிகரித்ததை தொடர்ந்து, நேற்று மதியம் 12 மணியளவில் தண்ணீர் திறப்பு விநாடிக்கு 12,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. இதன் காரணமாக அணை மின்நிலையம், சுரங்க மின்நிலையம் மற்றும் கதவணைகளில் மின் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.இது குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறும்போது, மேட்டூர் அணையில் தற்போது 30 டிஎம்சி தண்ணீர் இருப்பு உள்ளது. டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக, நாள் ஒன்றுக்கு ஒரு டிஎம்சி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும். மீன் வளம் மற்றும் குடிநீர் தேவைகளுக்காக 10 டிஎம்சி தண்ணீர் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். மீதமுள்ள தண்ணீரை கொண்டு இன்னும் 3 வாரங்களுக்கு தண்ணீர் திறந்து விடமுடியும். ஜனவரி 28ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட வேண்டுமானால், மழை பெய்து அணைக்கு நீர்வரத்து அதிகரித்தாலோ அல்லது கர்நாடகா, தமிழகத்திற்கு காவிரி நீரை வழங்கினாலோ மட்டுமே முடியும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.